அரையாண்டு பொதுத் தேர்வு –2019

பாடம் :தமிழ் விடைக் குறிப்புகள்

பகுதி–1 மதிப்பெண்கள் 15

1.ஆ.1–3, 2–1, 3–4 , 4–1

2. அ.அகவற்பா

3.அ.கருணையின் எலிசபெத்துக்காக

4.ஆ.மேகம் மழை நீர் வெள்ளம்

5.ஈ.ஜப்பான்

6.ஆ.கஅ – ச

7.அ.வேற்றுமை உருபு

8அ.வணிகக் கப்பல்களும் ஐம்பெரும்காப்பியங்களும்

9.அ.முல்லை

10.ஆ)உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாக செய்து விடவேண்டும்

11.அ)திருப்பதியும் திருத்தணியில்

12.அ)அருளை - பெருக்கி

13இ)அருமை + துணையாய்

14.ஈ. நீதிவெண்பா

15.இ) கா.ப. செய்குதம்பிப் பாவலர்

பகுதி –2 (மதிப்பெண்கள்– 18 )

பிரிவு 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. (21ஆவது வினாவிற்குக் கட்டாயம் விடையளிக்க வேண்டும்)

16. மெய்க்கீர்த்தி நோக்கம்:

மன்னர்களின் வரலாற்று நிகழ்வுகளை அறியவும், அவை அழியாமல் இருப்பதற்கு கல்லிலும் செதுக்கினார்.

17 கா.அப்பாதுரையார் –பன்மொழிப்புலவர்

உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.அம் மாநாட்டுக் குறிய மொழியும் தமிழே என்று அவர் கூறியுள்ளார்.

18.அமைதியான முறையில் இவ்வுலகத்தை தாங்கி நிறுத்த போராடும் போராளிகள் பெண்கள்

19. முகமன் சொற்கள்:

வாருங்கள், அமருங்கள் ,நலமா ,நீர் அருந்துங்கள்

20 விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ.செயற்கை நுண்ணறிவு கணினியான வாட்சன் எதனை கண்டுபிடித்தது?

ஆ.திறன்பேசிகளில் இயங்க உதவும் மென்பொருள் எதனை பட்டியலிடும்?

(பிறவும்)

21. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்

தியற்கை அறிந்து செயல்.

பிரிவு– 2 (மதிப்பெண் 10)

22. உடுப்பதுஉம் உண்பதுஉம் – இன்னிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையாத போது இனிய ஓசை காக எழுத்துக்கள் நீண்டு ஒலித்தல்.

23.அ.அம்மா சொன்னாரா ஆ.வந்து சென்றது.

24 உறுதித்தன்மை நோக்கி காலவழுவமைதி எடுத்துக்காட்டாக அமைகிறது.

35.நவீன இலக்கியம் காப்பியர் இலக்கியம்

26.அ.அழைப்பு மணி ஒலித்ததும் கதவைத் திறந்தாள்.

ஆ.ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றதும் பேச்சு தடைபட்டது.

27.பகுபத உறுப்பிலக்கணம்:

கிளர்ந்த –கிளர் +த்(ந்)+த் + அ

கிளர் –பகுதி த் – சந்தி (ந்) ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை அ –பெயர் விகுதி

28.அ) கீரி பாம்பு– உம்மைத்தொகை –கீரியும் பாம்பும் போல அண்ணன் தம்பி சண்டையிட்டுக் கொண்டனர்.

ஆ)இன்சொல்– பண்புத்தொகை –வள்ளுவரின் இன்சொல் வாழ்வுக்கு வழிகாட்டும்.

( பிறவும் )

பகுதி –3 (மதிப்பெண்கள் 18)

பிரிவு 1

29. நல்ல மொழிபெயர்ப்பாளன் சில மொழி மீறல்களை செய்வான். இதன் மூலம் புதிய இலக்கண விதிகளின் தேவையை உருவாக்குவான் செயல்களையே தன் வெளியீட்டு வடிவமாக கொண்டிருந்த தமிழ் அச்சு இயந்திரத்தின் வருகையை ஒட்டி மொழிபெயர்ப்பு எதிர்கொண்டபோது உரைநடை வளர்ச்சியும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அப்போது தமிழ் ஆங்கிலத் தொடர் அமைப்புகளையும் கூறுகளையும் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மொழிபெயர்ப்பு இத்தகைய மொழி பிரச்சனைகளை கடந்து அதன் தீர்வாக மொழியில் புது கூறுகளை உருவாக்கி வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

30 . தமிழர் போரிலும் அறநெறிகளை பின்பற்றினர். போர் என்பது வலிமையற்றோர், முதியோர் ஆகியோரின் எதிர்த்துப் போர் செய்யாமல் இருந்தனர். பார்ப்பனர் ,பெண்கள் ,

சசிகுமார்,மதுரை

நோயாளர்கள் ஆகியோருக்கு தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. நம்மை விட வலிமை குறைந்தவரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார். சங்க இலக்கியம் காட்டும் இத்தகையப் போர் அறம் இன்றைக்கும் தேவையே.

31.அ) நிகழ் கலைகள்

ஆ)பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை

இ.மகிழ்ச்சி கனிகொடுத்து கவலையை போக்கின்றன.

பிரிவு 2

வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடை அளிக்கவும்

32. விருந்தினராக ஒருவர் வந்தால் அவரை வியந்து உரைத்தல், நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல் ,முகமலர்ச்சியுடன் அவர்களை நோக்குதல், வீட்டிற்குள் வருக என்று வரவேற்றல், அவர் அவர் மனம் மகிழும்படி பேசுதல் , அவர் அருகிலேயே அமர்ந்து கொள்ளுதல், அவர் விடைபெற்றுச் செல்லும்போது வாயில் வரை பின் தொடர்ந்து செல்ல அவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல் ஆகிய ஒன்பதும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கம் ஆகும்.

33 இப்பாடலில் குறிக்கும் பூவை என்ற சொல் மலரையும் பெண்ணையும் ஒப்பிட்டு கூறியுள்ளது. நாட்டுப்புறப்பாடல் பெண் தெய்வமாகிய மாரோடு ஒப்பிட்டு பாடப்பட்டுள்ளது. நவீன கவிதையில் பூவின் மென்மையும் அழகும் பாடப்பட்டுள்ளது. நாட்டுப்புறப் பாடலில் மென்மையான மலரை தங்கத்தட்டில் எடுப்பதாக பாடப்பட்டுள்ளது.

(பிறவும்)

34. அடிபிறழாமல் எழுதுக

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல் கொண்ட நாட்டிடையில்
மன்னிஅரசு இருந்த மண்ணுலகப் பேரரசே!
தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகயே!
இன்னறும் பாப்பத்தே எண்தொகையே! நற்கணக்கே!
மன்னும் சிலம்பே மணிமேகலை வடிவே!
முன்னும் நினைவால் முடித்தாழ வாழ்த்துவமே!

அல்லது

தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசுஅறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்து கடை அறியா
வளம் தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்

பிரிவு– 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.

35.அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

| | | |
|---|---|---|
| அரியவற்றுள் | –நிரை நிரை நேர்– | கருவிளங்காய் |
| எல்லாம் | –நேர் நேர் | – தேமா |
| அரிதே | –நிரைநேர் | – புளிமா |
| பெரியாரைப் | –நிரை நேர் நேர் | – புளிமாங்காய் |
| பேணித் | – நேர் நேர் | – தேமா |
| தமராக் | –நிரைநேர் | – புளிமா |
| கொளல் | – நிரை | – மலர் |

36. இலக்கணம்

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் மனக் கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

சான்று

"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி வாரல்
என்பனபோல் மறித்துக் கைகாட்ட"

பொருத்தம்

கொடி காற்றில் அசைவது இயல்பான நிகழ்ச்சி . கோவலன் பின்னர் கொல்லப்படுவான் என்று கொடி கையசைத்து வரவேண்டாம் என்று கூறுவது போல அமைத்திருப்பது கவிஞரின் குறிப்பு எனவே தற்குறிப்பேற்ற அணி ஆயிற்று.

37 இந்நிகழ்வுக்குப் பொருத்தமான திணை வஞ்சித்திணை ஆகும்

மண்ணாசை காரணமாக பகைவர் நாட்டை கைப்பற்றி கருதி வஞ்சிப் பூவைச் சூடி போருக்குச் செல்வது வஞ்சி திணை ஆகும

அவந்தி நாட்டு மன்னன் மருத நாட்டு மன்னனுடன் பகைகொண்டு போர்புரிந்து மருத நாட்டை கைப்பற்ற நினைப்பதால் இந்நிகழ்வு பொருந்துகிறது.

பகுதி– 4 (மதிப்பெண்– 25)

அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும்

38.அ) மருவூர் பார்க்கத் துவங்கி வீதிகளில் வண்ண குழம்பு சின்னப்பொடி விற்பது போல் இன்றைய அங்காடிகளிலும் வணிக வளாகங்களிலும் விற்கப்படுகின்றன.

சந்தனம் பூ வகைகள் ஊதுவத்தி அகில் போன்ற நறுமணப் பொருட்களும் இன்றைய வணிக வளாகத்தில் கிடைக்கின்றன.

பொன்மணி முத்து பவளம் ஆகியவை மருவூர்ப்பாக்கம் வீதிகளில் விற்பனை செய்யப்பட்டது இன்று வணிக

ஈ.சேகர் 6 மதுராந்தகம் ஈரோடு

வளாகத்திலும் நகைக்கடைகளில் பொன் மணி முத்து பவளம் விற்கப்படுகிறது.மருவூர்ப்பாக்கம் அணியும் வீதிகளில் குவியலாக தானியங்கள் இருந்தன ஆனால் இன்று பொட்டலங்களில் சிறிதாகவே தானிய வகைகள் இருக்கின்றன.வெண்கலம் செம்பு பாத்திரம் மரப்பொருள்கள் இரும்பு பொருட்கள் மருவூர்ப்பாக்கம் வீதிகளில் காணப்பட்டன. இன்றும் அவை போல பல நவீன வேலைப்பாடுகளுடன் இக்கால வணிக வளாகங்களில் பார்க்கமுடிகிறது..

மருவூர்ப்பாக்கம் வீதிகளில் பொற்கொல்லர் வேலை செய்பவர் தையல்காரன் தொல்பொருள் செய்பவர் பலதரப்பட்ட கைவினைக் கலைஞர்கள் இருந்தனர். அதைப் போலவே இன்றைய அங்காடிகளிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கைவினைக் கலைஞர்கள் உள்ளனர்.

அல்லது

ஆ) திருமாலின் உருவத்தைப் போன்று அமைந்தது பெரிய மழைமேகம்.

பெரும் தோற்றம் கொண்ட மேகம் வளமாய் இருந்தது மலையைச் சூழ்ந்து விரைந்த வேகத்துடன் பெருமழை பொழிந்தது.

இது பெண்கள் காவலையுடைய ஊர் பக்கம் சென்றனர் வண்டுகள் நறுமணம் கொண்ட பூக்களை சுற்றி ஆரவாரம் செய்யும்.

நெல்லையும் முல்லை பூவையும் எடுத்து தெய்வத்திற்கு துவுதல் செய்வார்கள்.

தலைவிக்காக நற்சொல் கேட்டு நிற்கின்றனர்.சிறிய கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்த தன் வருத்தத்தைப் போக்க, உன்னுடைய தாய்மார்களை எங்களுடைய இடையர்கள் இப்போது ஓடி வந்துவிடுவார்கள் வருந்தாதே என்றாள்.

இத்தகைய நற்சொல்கேட்டு தலைவியிடம் தலைவன் விரைவில் வருவான் என்று முது பெண்கள் கூறினர்.

39 நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் உழவுத் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அண்ணா ஆசிரியருக்கு கடிதம் எழுதுக.

அனுப்புனர்

அஅஅ

பாரதி நகர் ,இ இ இ

பெறுநர்

ஆசிரியர்

தினமணி நாளிதழ் ,சென்னை–5

ஐயா,

வணக்கம்

பொருள் :பொங்கல் இதழில் கட்டுரை வெளியிடுதல் வேண்டுதல்

உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற கட்டுரையை நான் இத்துடன் இணைத்துள்ளேன் அக்கட்டுரையை தங்கள் பொங்கல் மலரில் வெளியிட அன்புடன் வேண்டுகின்றேன். நன்றி

இப்படிக்குத் தங்கள் உண்மையுள்ள

உறைமேல் முகவரி

பெறுநர்

ஆசிரியர்

தினமணி நாளிதழ்

சென்னை–5

( அல்லது)

ஆ.தங்கைக்கு திறன்பேசி பயன்பாட்டினால் ஏற்படும் நன்மை தீமைகளை குறிப்பிட்டு அறிவுரை கடிதம் எழுதுக

மாணவர் இல்லம்

இ இ இ

13.12.2019

அன்புள்ள தங்கைக்கு

உன் உயிர் அண்ணன் எழுதும் மடல். நான் இங்கு பள்ளி விடுதியில் நன்றாக இருக்கின்றேன். உன் நலத்தையும் நம் குடும்பத்தார் நலத்தையும் அறிய ஆசைப்படுகின்றேன். திறன்பேசியை நீ அடிக்கடி பயன்படுத்துவதாக அப்பா கூறினார். திறன்பேசி என்பது நன்மை தீமை என்ற இரு பக்கங்களை கொண்டது. செல்பேசி மூலம் நம் படிப்புக்கு தேவையான பொருள்களையும் பொது அறிவையும் வளர்த்துக் கொள்ளும் வகையில் எண்ணற்ற செய்திகள் உள்ளன. பள்ளியில் கற்க முடியாத செய்திகளை கூட திறன்பேசியின் நீ கற்றுக் கொள்ளலாம். ஆனால் நீ அதைப் பயன்படுத்தும் போது மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். தேவையற்ற இணையங்கள் தேவையற்ற விளம்பரங்கள் விளம்பரங்களை தவிர்த்து விடுதல் வேண்டும். திறன்பேசியின் மூலம் உன்னுடைய தகவல்கள் எதையும் மற்றவருக்கு தெரிவிக்கதே. உன் மனதை கெடுக்கும் வகையில் சில இணையங்கள் செயல்படுகின்றன. அவற்றை தவிர்த்து விடுதல் நல்லது நீரை தவிர்த்து பாலை உண்ணும் அன்னப் பறவையைப் போல திறன்பேசியின் உள்ள தீமைகளை விட்டுவிட்டு நன்மைக்கே அதை நீ பயன்படுத்து. மற்றவை நேரில்

இப்படிக்கு அன்பு அண்ணன்,

அஅஅ

உறைமேல் முகவரி

பெறுநர்

தமிழரசி

18 நேதாஜி நகர்

இ இ இ

40.

சோம்பலை தலையணையாக கொள்ளும்போது

உன் எதிர்காலத்தை

வேதனையாக கொல்ல வருகிறது

தூங்கிக் கிடப்பதை விடு.

தேவையற்றதை பார்ப்பதை விடு

உன்னைப் படிக்க.. நீ புத்தகத்தை படி..

அப்போதுதான்

உன் மூளை பூட்டு திறக்கும்

( பிறவும் )

41 நூலக உறுப்பினர் படிவம்

42. அ) நான் பள்ளியிலும் வீட்டிலும் ஒழுக்கம் உள்ளவனாக நடந்து கொள்வேன். வீட்டில் உள்ளவர்களுக்கும் பள்ளியில் உள்ளவர்களுக்கும் உதவுவேன் வீட்டில் தம்பி தங்கைகளுக்கு பாடம் சொல்லித் தருவேன். பள்ளியில் படிக்காத மாணவர்களுக்கு பாடம் சொல்லித் தருவேன். வீட்டையும் என் பணியும் சுற்றுப்புறத்தை துய்மையாக வைத்துக்கொள்வேன். வீட்டு வேலைகளையும் பள்ளி வேலைகளையும் சரியாக ஒழுங்காக செய்வேன் .(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க

மலர் : தேவி நீ அறையைவிட்டு வெளியே செல்லும் முன் விளக்கை அணைத்து விடு

தேவி :ஆம் நாம் மின்சாரத்தை சேமிக்க வேண்டும்

மலர் : நம்நாடு தெரு விளக்குகளை எரிய வைப்பதற்கு நிறைய மின்சாரத்தை செலவு செய்கிறது

தேவி : யாருக்கு தெரியும் வருங்காலத்தில் நம் நாடு செயற்கை நிலாவை இரவில் வானத்தில் விளக்குகளை எரிய வைக்கலாம்

மலர் :வருங்காலத்தில் நிறைய நாடுகள் இவ்வகையான செயற்கைக்கோளை நிறுவ இருப்பதாக நான் வாசித்துள்ளேன்

தேவி: நல்ல செய்தி நாம் செயற்கை நிலாவை நிறுவினால் அது பேரழிவு மற்றும் மின்சாரம் இல்லாத சமயத்தில் ஒளியூட்டி நிவாரண உதவிகளை செய்ய வழி செய்கிறது.

பகுதி– 5 (மதிப்பெண்கள் –24)

33.அ. செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்

முன்னுரை

இயற்கை நுண்ணறிவு மடங்கிப் போனதே செயற்கை நுண்ணறிவு பெறுவதற்கான காரணம் செயற்கை நுண்ணறிவின் காரணமாக எதிர்காலத்தில் என்னென்னவெல்லாம் நிகழப்போகிறது என்பதை காண்போம்.

போக்குவரத்து

விமானம் தொடர்வண்டி பேருந்து சிற்றுந்து மகிழ்வுந்து ஆகியவற்றை ஓட்டுவதற்கு எதிர்காலத்தில் மனிதன் தேவைப்பட மாட்டான். செயற்கை நுண்ணறிவு கொண்டு அதனை ஓட்டுபவன் ஆக இயந்திர மனிதன் இடம் பெறுவான்

வேளாண்மை

இன்று வேளாண்மை செய்வதற்கு எத்தனையோ அறிவியல் சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் வேளாண்மைக்கு தேவையான மனித ஆற்றல்கள் மிகவும் குறைவாகவே இன்று கிடைக்கின்றன. இந்நிலையைப் போக்க எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு கொண்ட எந்திர உழவர்கள் உருவாவார்கள் என்பதில் ஐயமில்லை.

மருத்துவம்

நோய்க்கான மருந்து வகைகளையும் நவீன அறுவை சிகிச்சை முறைகளையும் இனி எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு கொண்டுதான் செயல்படுத்தப்படும். மனிதன் செய்ய முடியாத சில அறுவை மருத்துவத்தை கூட இயந்திர மருத்துவர்கள் செய்து முடிப்பார்கள் விரைவில்.

முடிவுரை

இனிவரும் காலம் செயற்கை நுண்ணறிவின் காலம் என்பதை உணர்ந்து எச்சரிக்கை கொள்வோம்

(அல்லது)

ஆ) எதற்காக எழுதுகிறேன்

நான் எழுதுவதற்கு ஒரு துண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு .என் எழுத்துக்கு ஒரு லட்சியமும் உண்டு நான் எழுதுவது முழுக்க முழுக்க வாழ்க்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் விளைவு என தனித்தனி முயற்சியும் பயணமாகும்.

கலைத் தன்மைக்கு எந்தவித குறைவும் வராமல் கலா தேவியின் காதல் கணவனாகவும் சமுதாய தாயின் அன்பு புதல்வன் ஆகவும் இருந்து தான் நான் எழுதுகிறேன்.

அசோகமித்திரன் :ஜெயகாந்தன் எத்தகைய பாத்திரங்களைப் படைத்தாலும் அந்தப் பாத்திரங்களின் சிறந்த அம்சங்களை குறிப்பிடத் தவறுவதில்லை. துவேஷத்தை பரப்புவது அவருடைய இயல்புக்கு சற்றும் ஒவ்வாதது அவர் அரசியலில் தொடர்ந்து பங்கு பெறாமல் போனதற்கு இதுகூட காரணமாக இருந்திருக்கலாம்.

கா செல்லப்பன்: நீர் கொண்ட ஆனால் வித்தியாசமான பார்வை நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள் திமிர்ந்த ஞானச்செருக்கு கம்பீரமான குரல் வளமான புதுமையான வாழ்க்கை சித்தரிப்புகள் இவைகள்தான் ஜெயகாந்தன் என்ற செம்மாந்த தமிழனின் சிறப்பான அடையாளங்கள். படிக்காத மேதை என்று குறிப்பிடப்படும் அவர் முறையாக கல்லூரிகளில் படிக்கவில்லையே தவிர தமிழ் இந்திய இலக்கியங்களை மட்டுமின்றி சோவியத் பிரஞ்ச் இலக்கியங்களை நானே படித்து உணர்ந்து அது மட்டுமன்றி வாழ்க்கையையும் ஆழமாக படித்தவர் பிறகு அவற்றை வார்த்தைகளில் அழகுற படைத்தவர்.

**44** அன்னமையா

முன்னுரை

ராஜநாராயணன் அவர்கள் எழுதிய கோபல்லபுரத்து மக்கள் என்னும் கதை பகுதியில் வருபவர் அன்னமய்யா அவரைப் பற்றி இனி காண்போம்.

வாடிய இளைஞன்

சாலை அருகிலிருந்த சுப்பையாவின் புஞ்சையில் அருகு எடுத்தனர் முடித்துவிட்டு கஞ்சி குடிப்பதற்காக அன்னமய்யா உட்கார்ந்தார் புளிய மரத்தடியில் உட்காரும்போது, அங்கு ஒரு வாலிபன் வாடிய முகத்தோடு பசியோடு இருப்பதை அன்னமையா கண்டார். அது அவருக்கு மிகவும் மன வருத்தத்தை கொடுத்தது

நலம் விசாரிப்பு

வாடி அந்த இளைஞனிடம் மென்மையாக சிரித்துக் கொண்டே அவரின் நலத்தை விசாரித்தார். அந்த இளைஞன் குடிப்பதற்காக தண்ணீர் கேட்டான் நான் பசியறிந்து அன்னமய்யா அவனுக்கு நீச்சு தண்ணி கொடுத்தார்.

அன்னம் தான் ஐயா

வேப்ப மரத்தின் அடியில் இருந்த கஞ்சி களத்தையும் மோர் மிளகாயும் அந்த இளைஞனுக்கு அன்னமய்யா கொடுத்தார் அவனை அடுத்த பூஜைக்கு அழைத்துச் சென்று கம்மஞ்சோறு கொடுத்து அவன் உண்டான் வாலிபனுக்கு உணவு அளித்த அன்னமய்யா உண்மையில் அன்னம் தான் ஐயா

முடிவுரை

அன்னமய்யா வின் பெயர் மட்டுமல்ல அவர் குணம் கூட மனிதநேயமிக்க இதுதான் என்பதை கதை காட்டிவிட்டது

அல்லது

ஆ) தன்னலமற்ற பண்பு கொண்ட உன்னைக் கவர்ந்த ஆளுமை ஒருவர்.

**45.**அ) மழைநீர் சேமிப்பு

அல்லது

ஆ)அரசு பொருட்காட்சி